# இலங்கையின் போதைப்பொருள் பாவனையின் நிலைமைகள்

போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக 2009 ஆண்டு 18,743 நபர்கள் கைதாகி உள்ளதோடு இவர்களில் 68ழ் மானவர்கள் 30 வயதுதோ அதற்கு மேற்பட்டவர்களாகவும், 30ழ் இருபது வயதுக்கும் முப்பது வயதுக்கும் இடைப்பட்டவர்களாக காணப்பட்டனர். இத்தகைய போதைப்பொருள் குற்றங்களுக்கு கைதானவர்களின் ஆண்-பெண் விகிதம் 29:1 என காணப்பட்டது. போதைப்பொருள் குற்றங்களுக்கு கைதானவர்களின் 29ழ் ஹெரோயின் பாவனை சம்பந்தமாகவும் 71ழ கஞ்சா பாவனை தொடர்பாகவும் கைதாகியுள்ளதாக தெரிய வருகின்றது. பெரும்பாலான போதைப்பொருட்கள் தொடர்பான குற்றங்களுக்கு கைதானவர்கள், 48ழ் மேல் மாகாணத்திலிருந்து பதிவானதோடு, 13ழ் தென் மாகாணத்திலிருந்தும், 10ழ மத்திய மாகாணத்திலிருந்தும் பதிவாகியுள்ளனர். இவர்களின் 34ழ கைதானவர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்தும், 8ழ கம்பஹா மாவட்டத்திலிருந்தும் மற்றும் 7ழ கைதானவர்கள் கண்டி மாவட்டத்திலிருந்தும் பதிவாகி உள்ளனர். போதைப்பொருள் பாவனைக்கு கைதானவர்களின் வியாபித்த விகிதம் 2009 வருட சனத்தொகை கணக்கெடுப்பின் பிரகாரம் 100,000 பெயருக்கு 141 ஆக காணப்பட்டதோடு இவ் விகிதம் 14 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 100,000 பெயருக்கு 125 ஆக காணப்பட்டது. போதைப்பொருள் குற்றங்களுக்கு கைதானவர்களலில் 81ழ மானவர்கள் சிங்களவர் ஆவர்.

**கஞ்சா**

இலங்கையில் பயிரிடப்படும் சட்டத்திற்கு விரோதமான போதைப்பொருள் தயாரிக்கக்கூடிய ஒரே செடி கஞ்சா செடியாகும். இச் செடியின் பயிரச்செய்கை பொதுவாக தென் மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணத்தின் உலந்த பிரதேசங்களில் செய்யப்படுகின்றது. கஞ்சா பயிர்செய்கையானது 500 ஹெக்டெயர் நிலப்பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மற்றைய பணப்பயிர்களை போன்று அல்லாது கஞ்சா செடிக்கு சிறிதளவு உள்ளீடுகளே அவசியமனதோடு அதனை தாக்கக்கூடிய எதிரி இனங்கள் அரிதாகவே காணப்படுகின்றன. இதன் பயிற்செய்கைக்கு நவீன முறைமைகள் உபயோகிகப்படுவதோடு அதிக செறிவு கூடிய மலர்களை கொண்ட கஞ்சாவின் பாவனையானது இளைஞர் மத்தியில் அதிகரித்து வருகின்றது.

2009 ஆண்டு போதைப்பெருள் பாவனைக்காக கைதானவர்களில் அதிகமானவர் (13,300 நபர்கள்) கஞ்சா பாவனையுடன் தொடர்புடைய குற்றங்களுக்காகவே கைதாகியுள்ளனர். இவர்களில் அதிகமானவர்கள், 23ழஇ கொழுப்பு மாவட்டத்திலும் அதற்கு அடுத்தப்படியாக முறையே கம்பஹா மற்றும் அம்பன்தோட்டை மாவட்டங்களில் இருந்தும் கைதாகி உள்ளனர். பொலீஸ் தியக்கிகள் பணிமனை கஞ்சாவை அதிகமாக கைப்பற்றியுள்ளதுடன் அதற்கு அடுத்தபடியாக முறையே கொழும்பு வடக்கு பொலீஸ் பிரிவும், இலங்கை சுங்கப் பிரிவும் கஞ்சாவை கைப்பற்றியுள்ளது. வெளி மாவட்டங்களின் அறுவடை செய்யப்படும் கஞ்சா அதிக இலாபத்திற்காக கொழும்பிலும் பிராந்திய நகரங்களிலும் விற்பனை செய்யப்படுவதோடு

கைதுசெய்யப்படுவதை தவிர்துக்கொள்வதற்காக பொது போக்குவரத்து சாதனங்களின் மூலம் எடுத்துச்செல்லப்படுகின்றது. கஞ்சா வெளிநாடுகளில் இருந்து கடத்தப்படுவதோ அல்லது வெளிநாடுகளுக்கு கடத்தப்படுவதோ கடந்த வருடத்தல் காணப்படவில்லை. கடந்த வருடம் 84,605 கிலோகிராம் கஞ்சா நாடு முழுவதும் அபகரிக்கப்பட்டதோடு இவற்றில் 38மூ மானவை மேல் மாகணத்திலும் அதற்கு அடுத்தபடியாக முறையே தென் மாகாணம் மற்றும் மத்திய மாகாணங்களில் கைது செய்யப்பட்டுள்ளது.

2009 வருடத்துடன் ஒப்பிடுகையில் 2008 வருடம் கஞ்சா குற்றங்கள் 34மூ மாக குறைவடைந்துள்ளது. கஞ்சா பாவனைக்கு கைதானவர்களின் வியாபித்த விகிதம் சனத்தொகையின் ஒவ்வொரு 100,000 பேருக்கும் 66 ஆக காணப்பட்டதுடன் இதன் விகிதம் 14 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 100,000 பெயருக்கு 89 ஆக காணப்பட்டது.

கடந்த ஐந்து வருட காலத்தில் கஞ்சா பாவனையின் மாதிரியை பார்க்கையில் அதன் பாவனை இலங்கையில் ஒரு முக்கிய பிரச்சினையாக மாறிவந்துள்ளதோடு அதன் பாவனையாளர்களின் தொகை அதிகரித்து வருவதையும் காணக்கூடியதாக உள்ளது. கஞ்சா சம்பந்தமான குற்றங்களுக்கு கைதானவர்களின் எண்ணிக்கை 2005 முதல் 2007 வரை வெகுவாக அதிகரித்து வந்துள்ளது. இந்த எண்ணிக்கை 2005 ம் வருடம் 34,728 ஆகவும், 2006 ம் வருடம் 33,728 ஆகவும், 2007 ம் வருடம் 33,848 ஆகவும் காணப்பட்டது. ஆயினும் 2008 வருடம் இது குறைந்து காணப்பட்டது. ஆயினும் 2008 வருடத்துடன் ஒப்பிட்டுகையில் 2009 வருடம் கஞ்சா பாவனைக்கு கைதானவர்களின் எண்னிக்கை 34மூ தால் குறைவடைந்து காணப்பட்டது.

போதைப்பொருள் பதார்த்தம் அகற்றப்பட்ட கஞ்சா ஆயர்வேத தயாரிப்புகளில் உபயோகிக்கப்படுகின்றது. ஆயர்வேத மருந்தாக்கற் கூட்டுத்தாபனமே இத்தகைய கஞ்சாவை அதிகளவில் உபயோகித்து வருகின்றது. இதற்காக 2009 வருடம் 205 கிலோ கஞ்சா பாவிக்கப்பட்டுள்ளது. ஆயர்வேத மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் 191 கிலோவை கஞ்சாவை உபயோகித்து மதனமோதக, சுரன் விதுரவதீ, காமேச்வரி மோதகய, ரணஹன்ச ரசாயனய மற்றும் புத்தரச கல்கைய எனம் பொருட்களை தயாரித்துள்ளது.

**ஹெரோயின்**

1980 ஆண்டுக்கு முன் ஹெரோயின் பாவனையானது வெளி நாடுகளுக்கு சென்று வந்த ஒரு சில இலங்கையர் மத்தியிலும் நாட்டுக்கு வருகைதந்த சில உல்லாச பயணிகள் மத்தியிலுமே காணப்பட்டது. ஏனையவர்கள் மத்தியில் ஹெரோயின் பாவனையானது 1980 ஆண்டுகளின் முற்பகுதிகளில் பரவியதுடன் அதன் பாவனையாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. ஹெரோயின பாவனை ஆரம்ப காலத்தில் கொழும்பு நகரத்தில் காணப்பட்டபோதிலும் பிற்காலங்களில் பிராந்திய நகரங்களுக்கும் பரவியது. தற்போது ஹெரோயின் பாவனையானது இன, மத, éகோள வேற்றுமைகளை தாண்டி பரவிவந்துள்ளதோடும் நாட்டின் முக்கிய சுகாதார மற்றும் சமூக பிரச்சினையாகவும் காணப்படுகின்றது.

உலகளாவியரீதியாக சட்ட அமுலாக்கல் நிறுவனங்கள் சராசரி 10மூ மான போதைப்பொருள் கடத்தல்களை கைது செய்வதாக தெரியவந்துள்ளது. 2005 வருடம் முதல் 2009 ம் வருட காலப்பகுதிக்குள் கைப்பற்றிய ஹெரோயின் தொகையின் அடிப்படையில், வீதி மட்டத்தில் வருடந்தம் 763 கிலோகிராம் அல்லது நாள்தோறும் 2 கிலோகிராம் ஹெரோயின் வளங்கல் நடைபெறுவதாக கணிக்கப்பட்டுள்ளது. இந்த ஹெரோயின் அளவானது நாள் ஒன்றுக்கு 45,000 ஹெரோயின் பாவனையாளர்களுக்கு போதுமானதாகும். பெருமளவான ஹெரோயின் இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து மீன்படகுகள் மற்றும் உல்லாச பயணிகள் போல் வருகை தரும் கடத்ல்காரர்கள் மூலம் கடத்தப்படுகின்றது. இது தென் இந்தியாவிலிருந்து மேற்கு கரையோர பகுதிகள் ஊடாகவும் மீன்பிடி படகுகள் ஊடாக வந்தடைகின்றது.

2009 ஆண்டு 34 கிலோகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதுடன் 5,431 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 5மூ மானவர்கள் பெண்கள் ஆவர். பெரும்பாலான் கைதானவர்களிடம் சில மில்லிகிறாம் அளவிலான ஹெரோயின் சொந்தப்பாவனைக்காக கைவசம் இருந்ததை அறியகூடியதாக இருந்தது. ஹெரோயின் பாவனையின் வியாப்தி விகிதமானது 100,000 நபர்களுக்கு 27 நபர்கள் எனும் விகிதத்திலும் 14 வயதுக்கு மேற்பட்டவர்கள் இடையே 100,000 நபர்களுக்கு 36 நபர்கள் எனும் விகிதமாகவும் காணப்பட்டது.

நாட்டில் ஹெரோயின் பாவனைக்காக கைதானவர்களின் எண்ணிக்கையில் அல்லது அதன் ஹெரோயின பாவனையாளர்களில் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எதுவும் காணப்படவில்லை. கடந்த ஐந்து வருடத்தின் தரவுகளின் அடிப்படையில் ஹெரோயின் பாவனையாளர்களின் தொகை குறைந்து வந்துள்ளது. 2005 வருடம் ஹெரோயின் தொடர்பாக 11,738 நபர்கள் கைதுசெய்யப்பட்டபோதும் இத்தொகை 2009 வருடம் 5,431 நபர்களாக குறைவடைந்துள்ளது. மேல் குறிப்பிட்ட காலப்பகுதியினை ஒப்பீட்டுரீதியாக பார்க்கையில் ஹெரோயின் தொடர்பாக கைதானவர்கள் 54மூ மாக குறைவடைந்துள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

**அபின்**

அபின் ஆயுர்வேத வைத்திய முறைமையில் உபயோகமாவதோடு அரசு ஆயர்வேத மருத்துவர்களுக்கு அதனை அரசாங்க வைத்தியசாலைகள் ஊடாக விநியோகித்துவருகின்றது. அரசு 2009 வருடம் 124 கிலோகிராம் அபின் மருத்துவத் தேவைகளுக்காக விநியோகம் செய்துள்ளது. ஏறத்தாள 533 கிராம் சட்டவிரோதமான அபின் கைப்பற்றப்பட்டதுடன் இது தொடர்பாக 3 நபர்கள் கொழும்பு அனுராதபுரம் மற்றும் மட்டக்கிளப்பு மாவட்டங்களில் கைதுசெய்யப்பட்டனர்.

## விலை மற்றும் செறிவு

2009 வருடம் வீதி மட்டத்திலான ஹெரோயின் ஒரு கிலோகிராமின் விலை உள்நாட்டவர்களுக்கு மூன்று மில்லியன் இலங்கை ரூபாவாக (ஏரத்தாள 26,086 அமெரிக்க டொலர்கள்) விற்பனையானது. 2009 வருடத்துடன் ஒப்பிடுகையில் 2008 வருடம் ஹெரோயினின் இவ்விலை 33மூ த்தால் குறைவடைந்து காணப்பட்டது. வீதி மட்டத்தில் கஞ்சா ஒரு கிலோகிராமின் சராசரி விலை 12,000 இலங்கை ரூபாவாக காணப்பட்டது. இவ் விலை 2009 வருடம் 2008 ம் வருடத்துடன் ஒப்பீட்டுகையில் 40மூ குறைவடைந்து காணப்பட்டது. 2009 வருடம் வீதி மட்டத்தில் அபின் கிலோகிராமின் விலை 0.9 மில்லியன் இலங்கை ரூபாவாக் காணப்படடது.

ஹெரோயினின் செறிவின் சுட்டியான டய் அசிடையில் மோபினின் சராசரி அளவு 2009 வருடம் இலங்கையின் வீதி மட்டத்தில் 40மூ மாக காணப்பட்டதுடன் அது 2008 வருடத்துடன் ஒப்பிடுகையில் 10மூ த்தால் அதிகரித்துக் காணப்பட்டது. டயசிபாம், லக்டோஸ், சுக்ரோஸ், அசடமினோபின் மற்றும் கபேன் போன்றவை ஹேரோயினுடன் கலக்கப்பட்டியிப்பது தெரியவந்துள்ளது. தேசிய அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் தேசிய தியக்கிகள் ஆய்வுக்கூடம் மாதம் தோறும் ஹெரோயின் மாதிரிகளை ஆய்வு செய்து வருகின்றது. இதன் அடிப்படையில் கடந்து ஐநது வருடங்களில் கிடைத்த ஹெரேயின் மாதிரிகளின் சராசரி செறிவின் அதிக மாற்றங்கள் எதுவும் காணப்பட வில்லை. 2005 ம் வருடம் ஹெரோயின் செறிவின் அளவு 38.5மூ காணப்பட்டதோடு இது 2009 வருடம் 40.29மூ மாக அதிகரித்து காணப்பட்டது.

## போதைப்பொருட்கள் உட்கொள்ளும் விதம்

ஹெரோயின் புகையை உட்கொள்ளுதல் அல்லது “சேசிங் த டிரகன்” முறையே ஹெரோயின் பாவிப்பவர்களிடம் அதிகளவில் காணப்பட்டது. கஞ்சா மற்றும் ஹசீஸ புகைக்கப்படுகின்றது. அபின் பாவனையாளர்கள் அதை உண்னுகிறர்கள். போதைப்பொருள் பாவித்தவர்களிடையே, பலர் புகைப்பிடித்தலில் ஈடுபட்டதோடு சிலரே மது பாவனையில் ஈடுபட்டனர்.

## உளச்சார்பூட்டும் போதைப்பொருட்கள்

உளச்சார்பூட்டும் போதைப்பொருட்கள் மீதான சார்பு தன்மை இலங்கைளில் அதிகளவில் காணப்படவில்லை. இவற்றின் மீது சார்புத் தன்மை உண்டாகுவதற்கான இரண்டு காரணிகள் உள்ளனர். ஒன்று மருத்துவ காரணங்களுக்காக இவற்றை தொடர்ந்து பாவித்தல் இரண்டாவது ஹெரோயின் கிடைக்காத சமயங்களில் எற்படும் நோய்யளிவு உபாதைகளை தவித்துக்கொள்வதற்கான பாவனை. இவைகளின் சில மருந்துகளில் அடங்குகின்றன. இவைகளை பெறுவற்கு மருத்துவரின் சீட்டுகள் அவசியமான போதும், சில பொருட்கள் சட்ட விரோதமான சந்தையில் எளிதில் கிடைக்கின்றன. கடந்து ஐந்து வருடங்களில் அம்பிடைமின் மாத்திரைகள் கைபெற்றப்பட்டுள்ளதோடு இக் குற்றகளுக்காக 4 நபர்களும் கைதாகியுள்ளனர்.

## ஊக்கி இரசாயனங்கள்

ஊக்கி இரசாயனங்கள் என்பவை வேறு எதுவும் அல்ல செயற்கையாக தியக்கி இரசாயனங்களை தயாரிப்பதற்கான இரசான முறைமைகளில் உபபோகிக்கப்படுகின்ற இரசாயனப் பொருட்களாகும். ஊக்கி இரசாயனப்பபொருட்கள் பொதுவக சட்டரீதியான பொருட்களை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது. இவைகளை கடத்தல்காரர்கள் சட்டவிரோதமான போதைப்பொருட்களைள் தயாரிப்பதற்கு உபயோகித்து வருகின்றனர்.

இலங்கையில் ஊக்கி இரசாயனப்பொருட்கள் எதுவும் தயாரிக்கப்பபடாதபோதிலும் அவசியமான பொருடகள் வெளிநாடுகளில் இருந்து மருத்துவ மற்றும் கைத்தொழில் தேவைகளுக்காக இறக்குமதி செய்யப்படுகின்றது. அண்மைக் காலங்களில் இறக்குமதிச் செய்யப்பட்ட ஊக்கி இரசாயனப் பொருட்கள் அசடிக் அமிளம், அசிடோன், எபடிரின், இர்கோடமின், ஹயிதிரக்கொரோரிக் அமிளம், மெதில் எதில் கீடோன், பிபிரனோல், போட்டாசியம் பர்மெங்கனேட், சுடோ எபிடிரின், சல்பியுரிக் அமிளம், மற்றும் டொலுயீன் ஆகும். இத்தகைய இரசாயனப்பொருட்கள் ஹெரோயின் மற்றும் கொகேன் தயாரிப்பதற்காக உபயோகிகப்படுகின்றது. மெதகோலோன், டுளுனுஇ ஆனுயு.:.ஆனுஆயுஇ அம்பிடெமின், மெத்தம்பிடமின் மற்றும் பெண்சயிக்லிடீன் மாத்திரைக்ள போன்ற அதிகமான சார்புத்தன்மை உண்டாக்கக்கூடிய பொருட்கள் தயாரிப்பதற்கும் உபயோகமாகின்றது.

2008 ம் ஆண்டு தியக்கிகள் மற்றும் உளச்சார்பூட்டும் போதைப்பொருட்கள் கடத்தலுக்கு எதிரான சர்வதேச சமவாயத்தின் முதலாம் பகுதியின் பிரகாரம் 23 உளச்சார்பூட்டும் இரசாயனப் பொருட்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இச் சட்டம் ஐநா மற்றும் சார்க் உடன்படிக்கைகளிலும் உள்வாங்கப்பட்டுள்ளது. இலங்கையில் இவ்வகையான இரசாயனப்பொருட்கள் தயாரிக்கப்படாத போதிலும் 2008ம் ஆண்டு அவிஸ்சாவெல்லை கொஸ்கொட எனும் இடத்தில் இவைகளை தயாரித்த சட்டவிரோதமான நிறுவனம்மொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது ஒரு புதிய நிலைமையை உருவாகியுள்ளதோடு இந்நிலைமை முறியடிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

## போதைப்பொருள் கடத்தல்

சட்டவிரோதமான போதைப்பொருட்கள் கடத்தலை அளவிடும் சுட்டியாக சட்டத்தை அமுலாக்கும் நிறுவனங்களினால் அபகரிக்கப்படும் போதைப்பொருட்களின் உடை கருதப்படுகின்றது. ஐரோப்பா மற்றும் மேற்கு நாடுகளுக்கு இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து கடத்தப்படும் பாதையின் ஒரு மையமாக இலங்கை அமைந்துள்ளது. போதைப்பொருட்கள் கடத்தலில் ஈடுபடுபவர்கள் இவற்றை கொழும்பு மற்றும் மாலே நகரங்கள் ஊடாக எடுத்து செல்கின்றார்கள் என தெரிய வந்துள்ளது.

கடந்த ஐந்து வருடங்களாக கைதுசெய்யப்பட்ட ஹெரோயின் தொடர்பான தகவல்களின் அடிப்படையில் பாரக்கையில், தென்மேற்கு ஆசியாவின் "கோல்டண் கிரேசன்ட்" பகுதியில் உற்பத்தியாகும் "பிரவுன் சுகர்" எனும் ஹெரோயின் வகையே இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு கடத்தப்படுவதாக தெரியவருகின்றது. கடந்த ஐந்து வருடயங்களில் 43 வெளிநாட்டவர்கள் இலங்கையில் போதைப்பொருள் குற்றங்களுக்கு கைதாகியுள்ளனர். இவர்களில் 20 (50மூ) பாகிஸ்தானியர்கள், 9(21மூ) பேர் இந்தியர்கள், 4 பேர் மாலைத்தீவு நாட்டவர், ஏனைய 8 நபர்கள் மற்றைய நாட்டவர்களாவர். 2009 ஆண்டு 12 வெளிநாட்டவர்கள் போதைப்பொருள் குற்றங்களுக்காக இலங்கையில் கைதாகியுள்ளதோடு இவர்களில் பாகிஸ்தானியர்கள், இந்தியர்கள் மற்றும் நேபாளியர்கள் அடங்குவர்.

2009 வருடம் 14 இலங்கையர்கள் போதைப்பொருள் குற்றங்களுக்காக வெளிநாடுகளில் கைதாகியுள்ளர். அதிகமானவர்கள் தென் கொரியாவிலும், ஏனையவர்கள் முறையே இந்தியா மற்றும் அபுதாபியில் கைதாகியுள்ளனர். இவர்கள் 3.45 கிலோகிராம் ஹெரோயின், 2.798 கிலோகிராம் கஞ்சா மற்றும் 8 அம்பிடமின் மாத்திரைகளை கடத்திய குற்றங்களுக்கு கைதாகியுள்ளனர்.

**சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு சேவைகள்**

இலங்கையில் அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போதைப்பொருள் பாவனைக்கு பழக்கப்பட்டவர்களுக்கான வதிவிட வசதிகளுடனான சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு சேவைகளை் அளித்து வருகின்றனர். போதைப்பொருட்களில் சார்புடைய நபர்களுக்கான (சிகிச்கை மற்றும் புனர்வாழ்வு) 2007 ம் ஆண்டின் 54ம் இலக்க சட்டம் அமுலுக்கு வந்துள்ளதோடு கட்டாயத்தின் அடிப்படையில் சிகிச்சை அளித்தல் அண்மையில் நடைமுறைப்படுத்தப்படுகினறது. தேசிய அபாயகரமான அவுடதங்கள் கட்டுப்பாடுச் சபை நான்கு சிகிச்சை நிலையங்களை நடாத்தி வருவதுடன் வெளிக்கள சிகிச்சை வேலைத்திட்டங்களையும் நடாத்தி வருகின்றது. தே.அ.க.ச வின் நிலையங்கள் கொழும்பு, கணடி, காலி மற்றும் ஊராபொளையில் வதிவிட வசதிகளுடன் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு சேவைகளை நடாத்தி வருகின்றது. இச் சேவைகள் சபையின் தடுப்பு மற்றும் வெளிக்கள நடவடிக்கை பிரிவாக இயங்கிவருகின்றன.

மையங்களில் நடைபெறும் வேலைத்திட்டங்களில் தனிநபர் மற்றும் குடும்ப ஆலோசனைகள், விசத்தை அகற்றுதல், உடல் பயிற்சி, உள ஓய்வு முறைமைகள், உள்ளக மற்றும் வெளிப்புற நடவடிக்கைகள், உளசிகிச்சை முறைமைகள், கல்வி, நிலைமைகளுக்கு முகம்கொடுக்கும் திறன்கள் மற்றும் வளமான வாழ்க்கை முறைகளுக்கான உந்தல் நடவடிககைகள் இடம்பெறுகின்றன.

சிறைச்சாலைகள் திணைக்களமும் தெ.அ.க.ச வும் இணைந்து போதைப்பொருள் பாவனைக்கு பழக்கப்பட்டு சிறை சென்றவர்களுக்காக விசேட வேலைத்திட்டங்களை நடாத்தி வருகின்றது.

நாடளாவியரீதியாக போதைப்பொருள் பாவனைக்காக 2,975 நபர்கள் 2009 ஆண்டு சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களின் 2,387 (80மூ) நபர்கள் தே.அ.க.ச சிகிச்சை நிலையங்களிலும் மற்றும் 522 (18மூ) சிறைச்சாலைகளில் நடைபெறும் சிகிச்சை நடவடிக்கைகளிலும், ஏனைய 65(2மூ) நபர்கள் அரசசார்பற்ற நிறுவனங்களின் சிகிச்சை நிலையங்களிலும் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் அதிகபச்சமானவர் (60மூ) கொழும்பு மாவட்டத்தை சேர்ந்தவர்களும் 74மூ மாக சிகிச்சை பெற்றவர்கள் 30 வயதோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களாகவும் காணப்பட்டனர். கடந்த ஐந்து வருடங்க்ளில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவில் குறைந்து வந்துள்ளது. 2005 ஆண்டு 3,285 நபர்கள் போதைப்பொருள் பாவனைக்காக சிகிச்சை பெற்றுள்ளதோடு இத்தொகை 2009 ஆண்டு 2,975 ஆக குறைந்துள்ளது. புள்ளிவிபரங்களின்படி 2009ம் ஆண்டு 2005 ஆண்டுடன் ஒப்பீட்டுரீதியாக 9மூ தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

**சிறைவாசம்**

2009 ம் ஆண்டு 37,872 நபர்கள் சிறைவாசம் அனுபவித்ததோடு அவர்களில் 13,319 நபர்கள் போதைப்பொருள் பாவனையுடன் தொடர்புடைய குற்றங்களுக்கு சிறைக்கு சென்றனர். பேதைப்பொருள் குற்றங்களுக்கு சிறைவாசம் அனுபவித்தவர்களின் வியாப்தி விகிதம் 100,000 நபர்களுக்கு 86 எனும் விகிதம் அமைந்துயிருந்ததோடு, 14 வயதுக்கு மேற்பட்டவர்கள் இடையே 100,000 நபர்களுக்கு 79 எனும் விகிதமாக காணப்பட்டது. சிறைக்கு சென்ற அதிகமானவர்கள் சொந்தப் பாவனைக்காக சிறிதளவில் போதைப்பொருட்களை உடன் வைத்திருந்த குற்றங்களுக்கு தண்டனை பெற்றவர்கலாகும். இவர்களின் 52.6மூ ஹெரோயினுடன் தொடர்புடையவர்களாகவும், 47.3மூ கஞ்சாவுடன் தொடர்புடையவர்களாகவும் காணப்பட்டனர்.

**ஹெ.ச்.ஐ.வி மற்றும் எயிட்ஸ்**

ஊசி மூலம் போதைப்பொருட்களை உட்கொள்ளுதல் ஹெ.ச்.ஐ.வி மற்றும் எயிட்ஸ் பரவும் காரணியாகும். அண்மைக் காலங்களில் ஊசி மூலம் போதைப்பொருட்களை உட்கொள்வோரின் எண்ணிக்கை சிறிதளவில் உயர்ந்துள்ளதை காணக்கூடியதாக உள்ளது. இதுவரையில் இரு ஹெ.ச்.ஐ.வி மற்றும் எயிட்ஸ் உடையவர் ஊசி மூலமாக பேதைப்பொருட்களை உட்கொள்பவரென தெரியவந்துள்ளது.

முதல் ஹெ.ச்.ஐ.வி தாக்கம் உடைய இலங்கையரை 1987 ஆண்டு பதிவாகியுள்ளது. உத்தியோகப்பூர்வமான புள்ளிவிபரங்களின்படி 2009 ஆண்டு 1,196 ஹெ.ச்.ஐ.வி தாக்கம் உள்ளவர்கள் இனம்காணபட்டுள்ளதோடு அவரகளின் 707 நபர்கள் ஆண்கள் மற்றும் 498 நபர்கள் பெண்கள் பதிவாகியுள்ளது. புதிதாக பதிவானவர்கள் எண்ணிக்கை 139 ஆகும். ஆண்களின் மற்றும் பெண்களின் எண்ணிக்கை முறையே 13மூ மற்றும் 9மூ மாக அதிகரித்துள்ளது. 2009 ஆண்டு எயிட்ஸ் நோயாளிகலின் எண்ணிக்கை 309 தாக காணப்பட்டது. இவ்வாண்டு வரையில் 202 எயிட்ஸ் நோயாளிகள் இறந்துள்ளதோடு 2009 ஆண்டு 16 இறப்புகள் பதிவாகியுள்ளது.

**சட்ட அமுலாக்கல்**

பொலிஸ் திணைக்களம் மற்றும் பொலிஸ் தியக்கிள் பணிமனை (பொ.தி.ப), கலால் திணைக்களம், இலங்கை சுங்கம் மற்றும் கடற்படையினர் 2009 ம் ஆண்டு சட்ட அமுலாக்களில் ஈடுபட்டுவந்தனர். தேசிய அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை (தே.அ.அ.க.ச) கொள்கைத் திட்டமிடுதல் மற்றும் சட்ட அமுலாக்கல் நடவடிக்கைளை ஒருங்கிணைத்து வந்தது. சிறைச்சாலைகள் திணைக்களம் தே.அ.அ.க.ச அனுசரணையுடன் போதைப்பொருள் பாவனைகாக கைதானவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து வந்துள்ளது.

# # # # #